Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 08 (24 - 07 - 1991) புதன்கிழமை ஓசை: 156

## பற்றறிகள் உதவுமாறு புலிகள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அவசர தேவைக்கு பெரிய, சிறிய அளவிலான பற்றறிகள் தேவைப்படுகின்றன. பொதுமக்கள், வர்த்தகப்பிரமுகர்கள் பற்றறிகளை அருகிலுள்ள விடுதலைப் புலிகள் செயலகங்களில் வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். மற்றும்மண்வெட்டி,

(4 ஆம் பக்கம் பார்க்க)

★ ஈழநாதம் செய்தியின் எதிரொலி

# சடலங்களை அரசு ஏற்றது:

# இறுதிநேர முடிவு மாற்றம்

## கொழும்பில் ஏற்பட்ட சலசலப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட இராணுவத்தினரின் 29 சடலங்களையும் பொறுப்பேற்க மறுத்துவந்த சிறிலங்கா அரசு நேற்று நண்பகல் திடீரென தனது முடிவை மாற்றிக்கொண்டது. ஈழநாதத்தின் தலைப்புச் செய்தியும் அதனால் இராணுவ உயர்மட்டத்தில் ஏற்பட்ட சலசலப்பும் அரசாங்கத்தின் முடிவில் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

படையினரின் சடலங்களை தகனஞ் செய்வதற்கு ஆயத்தங்களைச் செய்திருந்த விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் இறுதி நேரத்தில் அரசாங்கத்தின் முடிவை அறிவித்தனர். இதனையடுத்து விடுதலைப்புலிகள் நேற்று பிற்பகல் 2·00 மணியளவில் கோண்டாவிலில் வைத்து இராணுவத்தினரின் சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தனர். இந்த சடலங்கள் நேற்றுமாலை பருத்தித்துறையில் கடற்படையினரிடம் கையளிக்கப்பட்டது.

முள்ளியான்-புல்லவெளிப் பகுதியில் நடந்த ஞாயிறு நடைபெற்ற கடும் மோதல்களின்போது விடுதலைப்புலிகளால் 29 இராணுவத்தினரின் சடலங்கள் மீட்கப்பட்டது என்பதும் இந்த சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்திடம் ஒப்படைக்க புலிகள் இயக்கம் இணங்கியது என்பதும் வாசகர்கள் அறிந்ததே. வழமைபோல, சர்வதேச போர்த் தர்மங்களின் பிரகாரம் இந்தச் சடலங்களைப் பொறுப்பேற்று அவற்றை சிறிலங்கா அரசிடம் கையளிக்க செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் இணக்கம் தெரிவித்தனர். ஆனால் சிறிலங்கா அரசாங்கம் இறந்த இராணுவத்தினரின் பூதவுடல்களை ஏற்றுக்கொள்ள முடியாதென நேற்று முன்தினம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் திட்டவட்டமாகக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு தளர்வு

(கொழும்பு)

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு உடனடியாக நீக்கப்படுவதாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவுடன் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது

(டில்லி)

ஆனையிறவிலுள்ள துருப்பினருக்கும் கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையலுவலகத்திற்கும் இடையே நேற்று தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டது. இத்தகவலை கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய செய்திகள் கூறியுள்ளன. இச்செய்தியில் மேலும் நேற்று பதின்மூன்றாவது நாளாகச் சண்டை தொடருகின்ற போதிலும் படையினர் முன்னேறவோ, முற்றுகையை முறியடிக்கவோ இயலவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இராணுவம் மிகுந்த கஷ்டப்படுகின்றதாம்

(கொழும்பு)

ஆனையிறவிலுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டதுமான படைமுகாமை சென்றடையும் "ஒப்பரேஷன் பலவேகய" நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் மிகுந்த கஷ்டத்துடன், மெது மெதுவாக நகர்ந்து செல்கின்றனர் என்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முற்பகல் 11 மணிக்கே அரசின் முடிவுவந்தது

### செஞ்சிலுவை அதிகாரி ஊர்ஜிதம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை 11மணியளவிலேயே இராணுவத்தினரின் சடலங்களைப் பொறுப்பேற்பதற்குஅரசாங்கம்மீளவும் இணக்கம் தெரிவித்தது. அரசாங்கத்தின் இந்தப் புதிய திருப்பத்தை நேற்று மதியம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி யாழ்ப்பாணத்தில் ஊர்ஜிதம் செய்தார்.

இதனைத் தொடர்ந்து நேற்று மாலை 2 25 மணிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைகாடு-வெற்றிலைக்கேணி

# நேற்று மோதல் சற்று தணிவு

(இயக்கச்சி)

ஆனையிறவுப் பகுதியில் சண்டை தொடங்கிய பதின்மூன்றாம் நாளாகிய நேற்று சண்டை நிலை மந்தமாக இருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. பெரும் மோதல்கள் நிகழாத போதும் இடையிடையே மோதல்கள் இடம் பெற்றது. எனினும் தொடர்ச்சியாக நேற்றுக் காலை தொடக்கம் மாலை வரையிலும் விமானத் தாக்குதல்கள் பெருமளவில் இடம் பெற்றன.

கடந்த சனி, ஞாயிறு கிழமைகளில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தீவிர தாக்குதலின் பின்னர் சிதறிய சிறிலங்கா இராணுவம் அதற்குப் பிற்பாடு இதுவரை எதுவித தாக்குதல் முயற்சியிலோ அன்றி முன்னேறும் நடவடிக்கையிலோ ஈடுபடவில்லை.

## உலகிற்கு உண்மையை உணர்த்தவே

# சடலங்களை ஒப்படைத்தோம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசு திட்டமிட்டு தமது வெகுசன தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி உலகையும் மக்களையும் பொய்ப் பிரசாரங்கள் மூலம் ஏமாற்றி வருகிறது. இவ்வுண்மை நிலையை அனைவரும் புரிந்துகொள்ளும்முகமாகவும் மனிதாபிமான அடிப்படையிலுமே இராணுவத்தினரது சடலங்களை கையளித்தோம்

\- ராஜன்

என யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பீப்பாக் குண்டுகளினால் 4 அடி ஆழக் குழிகள்

(இயக்கச்சி)

ஆனையிறவு முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் சிறிலங்கா விமானப்படை நடத்திவரும் அகோரத்தாக்குதல்கள் பாரிய சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. அநேகமான தென்னந் தோட்டங்கள் விமானப் படைத் தாக்குதல்களினால் நாசமாக்கப்பட்டுள்ளன. மேலும் கோயில்வயல் போன்ற இடங்களில் விழுந்த பீப்பாக் குண்டுகளால் தரையில் நான்கு அடி வரையிலான ஆழம் கொண்ட படுகுழிகள் தோண்டப்பட்டுக் காணப்படுகின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முத்திரைச் சந்தையில் இராணுவத்தின் சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

முள்ளியான், புல்லாவெளியில் நடந்த ஞாயிற்றுக்கிழமை சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பலமணி நேரம் நடைபெற்ற உக்கிர மோதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் 26 சடலங்கள் நேற்றுக்காலை 9 மணி முதல் மக்களின் பார்வைக்காக முத்திரைச்சந்தையில் வைக்கப்பட்டிருந்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணம்

### இளஞ்செழியன்

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இளஞ்செழியன் வீரமரணமடைந்தார்.

இவர் விடுதலைப் புலிகள் உறுப்பினர் கவிஞர் வாஞ்சிநாதனின் ஒரே மைனவார்.

## மக்களை பாதிக்காதவாறு இராணுவ நடவடிக்கையாம்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களைப் பாதிக்காதவாறு அவதானமாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சிறிலங்கா இராணுவத்திற்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு யாழ் அரச அதிபருக்கு நேற்று அறிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

அண்மையில் யாழ். குடாநாட்டில் பொதுமக்கள் குடியிருப்புகள் மீது கண்மூடித்தனமான முறையில் சிறிலங்கா இராணுவ முகாம்களில் இருந்து எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதை யாழ் அரச அதிபர் பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வந்ததை தெரிந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

**விளம்பரம்**

**அனித்தா பயிற்சி வகுப்பு**

விஞ்ஞானமுறைப்படி உடை தயாரிக்கும் சிகை அலங்காரம் Hair Style, Cake Icing General Cookery, Bridal Make-up Flower making Interior Decoration அனித்தா பயிற்சி நிலையம், பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம்.
(B/2849)

**ஜீவிதா**

தொழில் நுட்பக் கூடம்
ரி வி டெக், ரேடியோ, மணிக்கூடு, நிலைவண்டி மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும், விற்பனையாளர்களும், வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும் புதிய பழைய பாடல்களும், (புராண நாடகங்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடம் சந்தி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (B/2764)


# 100க்கு அதிகமானோரை வவுனியாவில் காணவில்லை

(வவுனியா)

வவுனியாவில் கடந்த ஒரு வருட காலத்தில் நூற்றுக்கும் அதிகமான தமிழ் பொது மக்கள் காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் மீண்டும் யுத்தம் ஆரம்பித்த பின்னர் வவுனியா நகரிலும், நகரை அண்டிய இடங்களிலும் வைத்து சிறீலங்கா இராணுவத்தாலும், அதன் உளவு படையாலும் ஏராளமான தமிழ்ப் பொதுமக்கள் மர்மமான முறையில் கடத்தப்பட்டுள்ளனர்.

குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உட்பட நூற்றுக்கும் அதிகமான பொது மக்கள் இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடும் இராணுவத்தினர், அவ்விடங்களில் வைத்து பல தமிழர்களை கைது செய்து கடத்திச் சென்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கடத்தப்பட்டவர்கள் பற்றிய விபரங்களை வழங்குவதற்கு இராணுவ வேலிடம் மறுப்பு தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுடன் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் இவ் ந்த சிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பலரும் சிறிலங்கா இராணுவத்தால் மர்மமான முறையில் வவுனியாவில் வைத்து கடத்தப்பட்டுள்ளனர்.

மிக இரகசியமான முறையில் கடத்தப்பட்ட தமிழ் மக்கள் அனைவரும் கொலைசெய்யப்பட்டுள்ளனர் என்று வேறொரு தகவல் தெரிவிக்கின்றது. (இ)

# வடக்கிற்கு உணவனுப்ப வாசுதேவ கோரிக்கை

(கொழும்பு)

வடபகுதிக்கு உடனடியாக உணவுப் பொருட்களை அனுப்பி பட்டினிச் சாவுகளைத் தவிர்க்குமாறு நவ சமசமாஜக்கட்சித் தலைவர் திரு வாசுதேவ நாணயக்கார எம் பி சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுக்கு செவ்வாயன்று அவசரத் தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

## தமிழகத்தில் பந்த்

(சென்னை)

காவிரி நீர் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை கர்நாடக அரசு அலட்சியம் செய்து வருவதை ஆட்சேபித்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை தமிழ் நாட்டில் பந்த் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மாநில அரசு கூட்டிய இக் கூட்டத்தில் அனைத்துக் கட்சிகளும் கலந்து கொண்டு, இடைக்காலத் தீர்ப்பு உத்தரவை அமுல்படுத்தும்படி அரசை வற்புறுத்தின. வெள்ளிக்கிழமை பந்த் நடத்த வேண்டும் என்ற முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் யோசனையை அனைத்துக் கட்சிக் கூட்டம் ஏற்றுக் கொண்டது.

ஓராண்டில் ஒளிரும் நினைவலைகள்!



தாயின் மடியில்
1973 - 01 - 28

தாயக மண்ணில்
1990 - 08 - 05

திதி: 24 07-91
புதன்கிழமை

## வீரவேங்கை சந்துரு
(இ. திருமாறன்)

05-09-1990 ஆம் ஆண்டு யாழ். கோட்டை இராணுவ முகாம் தாக்குதலில் வீரமரணமடைந்தார்

அன்பின் திருவுருவே எங்கள் மாறா எம்மைப் பிரிந்த காயங்களை மீட்கச் சென்றபோதே கோட்டை மண்ணில் கொடி பறக்க உன்னையே கொடுத்தாயே உன் வண்ண முகம் பாராமல் வாடுகின்றோம்; உன் அன்பு மொழி கேட்காமல் அலைகின்றோம். எம்மைப் பிரிந்தாய்.. ஓராண்டு ஓடி மறைந்தாலும் இன்னும் எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உன் நினைவலைகள் என்றும் எம் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டேயிருக்கும்,

மண்டான்,
சரணவாய்மேற்கு,
கரவெட்டி.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்,
உறவினர், நண்பர்கள்!

(B/ 2851)

பருத்தித்துறை
பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் (வ / து)

## அறிவித்தல்

1991 - 07 - 27ஆம் திகதி நடைபெறவிருந்த எமது சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை பொதுச்சபை உறுப்பினர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

செயலாளர்
1991 - 07 - 19 (B/2845)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கக்
கிளிநொச்சிக் கிளையின் வருடாந்தப்

## பொதுக்கூட்டம் - 15-09-1991

மேற்படி கூட்டம் செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு இந் நிறுவனத்தின் பணிமனையில நடைபெறும்.

※ புதிய அங்கத்தவர்களாக சேர விரும்புவோர் 31-07-1991 க்கு முன்னர் உரிய சந்தாப் பணத்தைச் செலுத்தி செயற்குழுவின் அங்கிகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

சந்தா விபரம்:-

※ சாதாரண அங்கத்தவர்
ரூபா 60/- (வருடாந்தம்)

※ ஆயுட்கால அங்கத்தவர்
ரூபா 500/- (ஒரு முறை மட்டும்)

— கௌரவ செயலாளர்

(B/2846)

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி

மானிப்பாயில்
அகாலமரணமடைந்த
மானிப்பாய் இந்துக்
கல்லூரி மாணவன்

தோற்றம்
26 - 03 - 1961

மறைவு
24 - 07 - 1983

மகாதேவா
இராஜகாந்தன்
(பவுண்)



உன் நினைவில் வாழும்
அம்மா, தங்கை

சண்டிலிப்பாய் (R/1545)

# நினைவு கூருகின்றோம்...

1991-07-24



## சிங்கன்

1986 ஆம் ஆண்டு மன்னாரில் ஆய்வின் போது ஏற்பட்ட தற்செயலான விபத்துக் காயங்களினால் எமைப் பிரிந்த

புதியவன் (கிங்ஸிலி இராசசூரியன் - சின்னப்பண்டிவிரிச்சான், மன்னார்)

பயிற்சி முகாமில் ஏற்பட்ட விபத்தில் காயமுற்று சிகிச்சையின் போது எமைப்பிரிந்த

❋ மாயா (எம். கிருஷ்ணன் - மன்னார்)

1988 ஆம் ஆண்டு அச்சுவேலியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமெய்திய

கணேஷ் (கந்தப்பிள்ளை கணேசமூர்த்தி - அச்சுவேலி தெற்கு)

1989 ஆம் ஆண்டு ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியில் தேச விரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

1990 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

ரதீஸ் (வி. ஜெகநாதன்)

பரந்தனில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

சிங்கன் (சண்முகராசா சுரேஷ்குமார் - பொற்பதி வீதி, கொக்குவில்)

ஆனையிறவு முகாம் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

மிரேஸ் (சோமசுந்தரம் பரமேஸ்வரன் - வெருகல், மூதூர்சேனை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்;

❋ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டு இயங்கியவர் ஆவார்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B- 2848)

## 1987 சமாதான உடன்படிக்கை

# இனப்பிரச்சினைத் தீர்விற்கு சாதகமான ஓர் அடிப்படை

(டில்லி)

1987ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சாத்தியமான ஓர் அடிப்படை என்று இந்தியா மீண்டும் வலியுறுத்துகின்றது என்று இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அந்த அதிகாரி சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா வெளியிட்ட கருத்துக்கள் குறித்து கேட்டபோது இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம்தான் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண உள்ள ஒரு ஊன்றுகோல் என்றும் இந்த உடன்படிக்கையை இந்தியா எப்போதுமே ஏற்று நடந்திருக்கிறது என்றும் அவ்விதமே அது தொடர்ந்து செயல்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

# இல.தமிழரைவெளியேற்றல் தமிழக அரசின் விடயம்

(திருச்சி) - சவான்

தமிழகத்தில் அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்களின் பெரும்பாலானோர் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளவில்லை என மத்திய உள்துறை அமைச்சர் எஸ் பி சவான் தெரிவித்துள்ளார்.

நேற்று திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய எஸ். பி. சவான் "காவல் நிலையங்களில் இவ்வாறு பதிவு செய்யாமல் இருக்கும் இலங்கைத் தமிழர்கள் நாடு கடத்தப்படுவார்களா" என்று நிருபர்கள் கேட்டதற்கு தமிழக அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இது தொடர்பாக தாம் மாநில முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுடன் தாம் பேச்சு நடத்தப்போவதாகவும் தெரிவித்தார்.

# ஒரு சில மாதங்களில் இஸ்-அரபு பேச்சுவார்த்தை

(ஜெருசலேம்) — சமீர்

அரபு-இஸ்ரேலிய அமைதிப் பேச்சுக்கள் அடுத்த ஒரு சில மாதங்களில் நடக்கலாம் என்ற நம்பிக்கை இருப்பதாக இஸ்ரேலிய பிரதமர் சமீர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜேம்ஸ் பேக்கருடன் ஜெருசலேத்தில் நடத்திய பேச்சுக்களுக்குப் பின்னர் இஸ்ரேலிய பிரதமர் சமீர் இக்கருத்தை வெளியிட்டார்.

மேற்காசிய அமைதி மாநாடு ஒன்றிற்கான அமெரிக்க யோசனையை இஸ்ரேல் ஏற்றுக் கொள்ளக் கூடும் என்பதை சமீரின் இந்த அறிவிப்பு காட்டுவதாக உள்ளது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

---

**முற்பகல்**

வரையில் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ராஜன், கோண்டாவில் விடுதலைப் புலிகள் தலைமைச் செயலகத்தில் வைத்து 29 சடலங்களையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் பிரதிநிதி திரு. பிளட்டிடம் ஒப்படைத்தார்.

இராணுவத்தினரின் சடலங்கள் மூன்று லொறியில் ஏற்றப்பட்டு செஞ்சிலுவைக் கொடியுடன் பருத்தித்துறை கொண்டு செல்லப்பட்டது.

மாலை சுமார் 5 மணியளவில் திரு. பிளட் பருத்தித்துறைக் கடலோர இறங்குதுறையில் இராணுவத்தினரின் 29 சடலங்களையும் சிறிலங்கா கடற்படையிடம் ஒப்படைத்தார்.

சடலங்கள் கொழும்பில் பாதுகாப்புப் படை அதிகாரிகளிடம் கையளிக்கப்படும் என்று செஞ்சிலுவைச் சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப்புலிகளிடம் பொறுப்பேற்ற சிறிலங்கா இராணுவத்தினரின் 29 சடலங்களை பருத்தித்துறைக் கடலோரத்தில் வைத்து சிறிலங்கா கடற்படையிடம் ஜூலை 23 ஆம் திகதி மாலை தாம் கையளித்ததாகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யாழ் நகரிலும் கொழும்பிலும் சமகாலத்தில் வெளியிட்ட செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

---

**உலகிற்கு**

ராஜன் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் 2-25 மணியளவில் கோண்டாவில் செயலகத்தில் இடம்பெற்ற இராணுவத்தினரது சடலங்கள் கையளிப்பு நிகழ்ச்சியின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் எம்மால் ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்ட 29 சடலங்களையும் அரசு ஏற்க தயங்கியது. சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம் மூலம் பல தடவை தொடர்பு கொண்ட போதும் அரசு பொறுப்பேற்க மறுத்தது இதனால் செம்மணி மயானத்தில் சடலங்களை தகனம் செய்ய தயாரானோம். அதற்கான ஆயத்தங்கள் யாவும் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை செஞ்சிலுவைச் சங்கம் மூடாக அரசு சடலங்களை பொறுப்பேற்பதாக நேற்று காலை 11-30 மணியளவில் எமக்குத் தகவல் அனுப்பியது. இதனைத் தொடர்ந்தே சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தோம். இத்துடன் நான்காவது தடவையாக சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மக்கள் இதுவரை காலமும் வரலாற்று வடிவில் புத்தகங்களில் படித்தவற்றை இன்று விடுதலைப் புலிகள் நிரூபித்து வருகிறார்கள் மிக நெருக்கமான முறையில் சில யார் தூரத்தில் வெட்டை வெளியில் பாதுகாப்பு அரண்கள் எதுவுமின்றி நேருக்குநேர் நின்று பலமணி நேரமாகத் தொடர்ந்து போராடி எதிரியை அழித்தும் அனைத்து ஆயுதங்களைக் கைப்பற்றியும் வருகிறோம் கவச வாகனங்களை நாம் வெட்டை வெளியில் நின்றுஎதிர்க்கிறோம்

இதுவரை ஆனையிறவுப்போரில் 300 திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டும் 1000 திற்கு மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# அடகு நகைகள் மீளளிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் உள்ளமக்கள் வங்கிகளில் நகைகளை அடகு வைத்து மீட்பதற்காக பணம் செலுத்தியவர்களுடைய அடகு நகைகள் இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படவுள்ளதாக மக்கள் வங்கி மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

# கல்முனை அகதி முகாமில் தீ விபத்து

(கொழும்பு)

கல்முனை அகதி முகாமில் ஏற்பட்ட தீயினால் ஐந்து பேர் உயிர் இழந்தனர் என்றும் 23 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் தேங்கியுள்ள கழிவுகளை சிரமதான மூலம் அகற்றும் பணியில் யாழ். மாநகரசபையைச் சேர்ந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஈடுபட்டுவருகிறார்கள்

---

**சடலங்களை அரசு**

கூறியது. இந்தத் தகவலை செஞ்சிலுவை சங்கப் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளின் தலைமைக் காரியாலயத்திற்கு நேற்றிரவு உத்தியோகபூர்வமாக அறிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, இராணுவத்தினரின் சடலங்களை ஏற்பதற்கு அரசாங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது என்ற செய்தியை எமது பத்திரிகை தலைப்புச் செய்தியாக பிரசுரித்தது. ஆனையிறவு முற்றுகைப் போரில் சிங்கள இராணுவம் பேரிழப்புகளை சந்தித்தவரும் உண்மை சிங்கள தேசத்திற்கும் சர்வதேச உலகிற்கும் அம்பலமாகிவிடும் என்ற அச்சத்தில் அரசாங்கம் தனது இராணுவத்தினரின் இறந்த சடலங்களை ஏற்க மறுப்பதாகவும் ஈழநாதம் அரசைக் கண்டித்திருந்தது.

ஈழநாதத்தின் செய்தி கொழும்புக்கு எட்டியதும் அரச வட்டாரங்களிலும் இராணுவத் தலைமைப் பீடத்திலும் பெரும் சலசலப்பு ஏற்பட்டதாகத் தெரிகிறது. அரசாங்கத்தின் முடிவு இராணுவ தளபதிகளுக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியதாகவும், சடலங்களை ஏற்க மறுப்பது இராணுவ வீரருக்கு செய்யும் இழுக்காகவும், அவமதிப்பாகவும் அவர்கள் கருதியதாகவும் இவ்விவகாரம் அம்பலமானால் படைவீரர்கள் மத்தியில் குழப்பமும் கோபமும் ஏற்படலாமென அவர்கள் அச்சம் கொண்டதாகவும் நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இராணுவ தலைமைப்பீடத்தின் அழுத்தம் காரணமாகவே அரசாங்கம் கடைசி நேரத்தில் தனது முடிவை மாற்றிக் கொண்டதாக தெரிகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இறுதி நேரத்தில் அரசாங்கத்தின் முடிவை தெரியப்படுத்தி இராணுவத்தினரின் சடலங்களைப் பொறுப்பேற்றதையடுத்து விடுதலைப்புலிகள் சடலங்களைத் தகனம் செய்யும் ஏற்பாடுகளைக் கைவிட்டனர்.

---

**முத்திரைச் சந்தையில்**

பெருந்திரளான மக்கள் இதனை நீண்ட வரிசையில் நின்று பார்வையிட்டனர். சடலங்கள் பழுதடைந்திருந்தாலும் துர்நாற்றம் வீசியதாலும் சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் எனக்கருதி 12-30திற்கு அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டது மேலும் 3 சடலங்கள் மிகவும் பழுதடைந்திருந்ததால் மக்கள் பார்வைக்கு வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச) (85)

# மக்கள் அஞ்சலிக்காக மல்லாகத்தில் புகழுடல்கள்

(சுன்னாகம்)

கட்டைக்காடு-புல்லாவெளி மோதலில் வீரமரணமடைந்த எட்டுப் போராளிகளின் புகழுடல்கள் பொதுமக்களின் அஞ்சலிக்காக நேற்று மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் வைக்கப்பட்டன.

இங்கு விக்சன் (வேலுப்பிள்ளை சந்திரகுமார் சங்கானை), விஜயன் (வேலுப்பிள்ளை மாரிமுத்து கண்டி), மணிவாசகன் (கணேசநாதன் ஜனார்த்தனன் இணுவில்), பட்சன் சீனியர் உதயராஜா புன்னாலைக்கட்டுவன்), சிவானி (சண்முகநாதன் ரோசினி கொக்குவில்), காவலன் (அரியரட்ணம் குகநாதன் வட்டுக்கோட்டை), பாண்டியன் (துரைசிங்கம் கிருஷ்ணகுமார் பண்டத்தரிப்பு), அறிவொளி சிறீபத்மநாதன் சத்தியசீலன் கண்டுக்குளி) ஆகியோரது புகழுடல்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன.

இம் மாவீரர்களுக்கு பெருமளவில் மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர். இதைத் தொடர்ந்து நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பொன்னை முன்னெடுப்புப் பொறுப்பாளர் பராமாவீர் முன்னணியைச் சேர்ந்த கீர்த்தி, மற்றும் தனபால், ரஞ்சன் மாஸ்டர் ஆகியோர் உரையாற்றினர்.

கூட்டத்தைத் தொடர்ந்து அங்கிருந்து ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்து வரப்பட்ட மாவீரர் புகழுடல்கள் தீயுடன் சங்கமமாயின.

# சண்முகம் தொடர்பாக லோக்சபாவில் அறிக்கை

(சென்னை)

நிலச்சுவாந்தர் சண்முகத்தின் மரணம் பற்றி இன்று லோக்சபையில் விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது இத்தாவலைமத்தியஉள்துறை அமைச்சர் எஸ். பி சவான் நேற்றுச் சென்னையில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பான பிரதான குற்றவாளியில் ஒருவரான சண்முகத்தின் மரணத்தைப்பற்றிய விபரங்களைத் தெரிந்து கொள்வதற்காக அமைச்சர், வேதாரணியம் பகுதிக்கு நேற்றுப் பிற்பகல் சென்றார்.

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இன்றிலிருந்து 28 ஆம் திகதி வரை அகில இலங்கைக் கம்பன் கழகத்தினரால் நடாத்தப்படவிருந்த கம்பன் விழா நாட்டின் இன்றைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு பிற்போடப்பட்டுள்ளதாகவும் நிலைமை சீராகியதும் விழாவுக்கான புதிய திகதியை அறிவிப்பதாக கழகச் செயலாளர் க. குமாரதாஸன் அறிவித்துள்ளார்.

## தபால்கள்வந்தன

பருத்தித்துறை இறங்குதுறையில் கடந்த காலங்களாக தேங்கிக் கிடந்த தபால் பொதிகள் நேற்று யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டது அத்துடன் யாழ்ப்பாணத்தினதும் தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்பட்டது.

# அடையாளம் காட்டி சைக்கிள்கள் பெறவும்

(நமது நிருபர்)

நாவற்குழிப் பகுதியில் வைத்து சைக்கிள் திருடன் ஒருவனிடமிருந்து ஐந்து சைக்கிள்கள் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன. 2044058. T2163168 B1286649 ஆகிய இலக்கங்களையுடைய பெண்களுக்குரிய சைக்கிள்கள் மூன்றும் T1923706. T2042891 ஆகிய இலக்கங்களையுடைய ஆண்களுக்குரியஇரண்டுசைக்கிள்களும் அடங்கும் உரிமையாளர்கள் தென்மராட்சி மக்கள் முன்னணி தலைமை பணிமனையுடன் (புத்தூர் சந்தி) நேரில் உரிய ஆதாரங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்

## அடையாளம் காட்டிப் பெறவும்

(நீர்வேலி)

கடந்த திங்கட்கிழமை மாலை பருத்தித்துறை வீதியில் (நீர்வேலி கந்தசாமி கோவில் அருகாமை) அரசகுமார் என்பவரால் கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்

---

**ஊரடங்கு**

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமையகம் கொழும்பில் அறிவித்துள்ளது இந்த உத்தரவு உடனடியாக அமுல்படுத்தப்படும் எனத் தெரிவித்திருக்கும் நடவடிக்கை தலைமையகம் மறு அறிவித்தல் வரும்வரை வவுனியாவிற்கு வடக்கே வாகனப் போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளது

**பீப்பாக்குண்டு**

கோவிலாக்கண்டி பகுதிக்கும் இயக்கச்சிக்கும் இடைப்பட்ட பகுதியிலிருக்கும் பல வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன இப்பகுதியில் தினமும் அவ்ரோ, வை 12, குண்டுவீச்சு விமானங்கள், உலங்கு வானூர்திகள் தாக்குதலை நடத்து வருகின்றன.

**இராணுவம்**

சிறிலங்கா இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய இந்த அதிகாரி விடுதலைப் புலிகள் ஜீவமரணப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என தெரிவித்தார்.

# காரைநகருக்கு கடமைக்குச் செல்ல பணிப்பு

காரைநகர், ஊர்காவற்றுறை பிரதேசங்களில் உள்ள சகல தபால் அலுவலகங்கள் அனைத்தும் உடன் அப்பகுதிகளில் கடமையாற்றிய சகலதர அலுவலக ஊழியர்களும் தமது அஞ்சல் நிலையங்களுக்குச் சென்று இயங்க வைக்க வேண்டுமெனக் கொழும்பு பிரதம தபால் திணைக்கள உயரதிகாரியினால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

---

**பற்றறி**

சாக்கு உரப்பைகள், பிக்கான் சவல் ஆகியவையும் அதிக அளவில் தேவைப்படுகின்றன. இவற்றையும் தந்து உதவுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செய்திக் குறிப்பொன்று கோருகிறது.

**மக்களை**

ததே.

அத்துடன் இத்தாக்குதல்களில் இறந்தவர்களினதும், காயமடைந்தவர்களினதும் விபரங்களும் கோரப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (மு)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.